# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

**அறிவிக்கை எண். 36 / 2012** **நாள்: 07.09.2012**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் கீழ்க்காணும் பதவிக்கு நேரடி நியமனம் செய்ய 08.10.2012 அன்று வரை இணைய வழி மூலம் மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| பதவியின் பெயர் மற்றும் பதவிக் குறியீட்டு எண் | பணியின் பெயர் மற்றும் குறியீட்டு எண் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | சம்பள ஏற்ற முறை |
|---|---|---|---|
| வேளாண்மைப் பொறியியல் துறையில் **உதவிப் புவியியலாளர்** (குறியீட்டு எண். 1677) | தமிழ்நாடு வேளாண் பொறியியல் சார்நிலைப் பணி (குறியீட்டு எண் 014) | 7 | ரூ. 9,300-34,800 + 4,700/- தர ஊதியம் (ச.ப. 2) |

## 2. முக்கிய தேதிகள்:-

| | | | |
|---|---|---|---|
| அ | அறிவிக்கை நாள் | 07.09.2012 | - |
| ஆ | விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | 08.10.2012 | - |
| இ | வங்கி அல்லது அஞ்சலகங்கள் மூலம் கட்டணம் செலுத்துவதற்கான கடைசி நாள் | 10.10.2012 | - |
| ஈ. | தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம் | 24.11.2012 முற்பகல் | முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை |

## 3. காலிப் பணி இடங்களின் பகிர்மானங்கள்:-

நியமன ஒதுக்கீட்டு விதியின்படி பின்வரும் முறையில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும்.

| பொ. பி. | பி.வ. | பி.வ.(மு) | மி.பி.வ./ சீ.ம. | ஆ.தி. | ஆ.தி. (அ) | ப.ப. | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2 (1பெ) | 1 | - | 2 (1பெ) | 1 | 1(1பெ) | - | 7 (3பெ) |

**விரிவாக்கம் :-**

பொ.பி.- பொதுப்பிரிவினர், பி.வ.- பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பி.வ.(மு)- பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்), மி.பி.வ./சீ.ம.- மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் /சீர் மரபினர், ஆ.தி.- ஆதி திராவிடர், ஆ.தி(அ)- ஆதி திராவிடர்(அருந்ததியர்), ப.ப.- பட்டியல் பழங்குடியினர், பெ- பெண்கள்.

**குறிப்பு:**

அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்கள் அந்தந்த குறிப்பிட்ட வகுப்பினருக்காக

ஐ. தெரிவுக் குறித்து எழுப்பப்படும் எந்த ஒரு கோரிக்கையும் (விண்ணப்பதாரர் நிலை விண்ணப்பப் படிவத்தில் கோரிய உரிமை தவிர) தெரிவு முடிவுகள் வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் பெறப்பட வேண்டும். 90 நாட்களுக்குப் பின்பு பெறப்படும் தெரிவு குறித்த எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்பட மாட்டாது.

6. **<u>எழுத்துத் தேர்விற்கான பாடத்திட்டம் (கொள்குறி வகை மற்றும் வாய்மொழித் தேர்வு):-</u>**

| பாடம் | கால அளவு | அதிகபட்ச மதிப்பெண்கள் | தெரிவிற்குத் தகுதி பெற குறைந்தபட்ச மதிப்பெண்கள் | |
|---|---|---|---|---|
| | | | ஆ.தி, ஆ.தி (அ), ப.ப., மி.பி.வ. / சீ.ம., பி.வ. மற்றும் பி.வ.(மு) | இதர வகுப்பினர் |
| **<u>கீழ்கண்ட பாடத்தில் ஒற்றைத் தேர்வுத் தாள்</u>** (200 வினாக்கள்)<br><br>**புவியியல் (Geology)** (குறியீட்டு எண். 058) (பட்டப் படிப்புத் தரம்)<br><br>வாய்மொழித் தேர்வு மற்றும் ஆவணங்கள் | 3 மணி நேரம் | 300<br><br>40 | 102 | 136 |
| மொத்தம் | | 340 | | |

**<u>குறிப்பு:</u>**

(i) தற்போது நடைமுறையில் உள்ள இளநிலை தரத்திலுள்ள புவியியல் (Geology) தாள் -I (10 அலகுகள்) மற்றும் தாள் -II (10 அலகுகள்) ஆகியவை இணைக்கப்பட்டு ஒரே (20 அலகுகள்) பாடத்திட்டமாக தொகுக்கப்பட்டுள்ளது. ஒரே கேள்வித்தாளில் மேலே சொல்லப்பட்ட பாடத்திற்கு விண்ணப்பதாரர்கள் பதிலளிக்க வேண்டும்.

(ii) வினாத் தாள் ஆங்கிலம் மற்றும் தமிழில் தயார் செய்யப்பட்டிருக்கும்.

(iii) மேற்குறிப்பிட்ட பாடத்திற்கான பாடத்திட்டம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி அறிவிப்பு வெளியீட்டு எண் 11, நாள் 16.05.2001ல் வெளியிடப்பட்டுள்ளது.

| பாடம் | பக்கம் |
|---|---|

